2015 ஏப்ரல் 1]

111—

சர்க்கரை ஆலை

***52042—திரு. சி. கிருஷ்ணன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர் தொகுதியில் சர்க்கரை ஆலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஓமலூர் தொகுதிக்குட்பட்ட கரும்புப் பகுதி, ஏற்கெனவே நாமக்கல் மாவட்டம், பள்ளிப்பாளையத்திலுள்ள பொன்னி சர்க்கரை ஆலைக்கும், தருமபுரி மாவட்டம், அரூரிலுள்ள சுப்ரமணிய சிவா கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்கும் ஒதுக்கப்பட்ட பகுதியாகும். அந்த இரண்டு சர்க்கரை ஆலைகளுக்கும் தேவையான கரும்பு இல்லாத காரணத்தினால், முழு அரைவைத் திறனுடன் அரைக்க முடியாமல் கடந்த மூன்று ஆண்டுகளாகக் குறைந்த அளவில் அரைவை நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. போதிய அளவு கரும்பு இல்லாத காரணத்தினால், ஓமலூர் தொகுதியில் புதிய சர்க்கரை ஆலை அமைப்பதற்குச் சாத்தியக்கூறுகள் இல்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கிருஷ்ணன் அவர்கள்.*

திரு. சி. கிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்களின் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய பணிவான வணக்கத்தை அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன். நம்முடைய சட்டமன்றத்தில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், இந்த மாதத்திலே, நமக்கெல்லாம் மீண்டும் ஒரு தீபாவளி வர இருக்கிறது*

என்றால், இந்த மாதத்திலே தமிழகத்தின் மக்களின் முதல்வர், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேறு சப்ஜெக்ட் பேசுங்கள்.

திரு. சி. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் தமிழகத்தினுடைய முதலமைச்சராக புடம் போட்ட தங்கமாக, சிங்கமென இந்த மன்றத்திலே (மேசையைத் தட்டும் ஒலி) வருகின்ற அந்த நாள் நமக்கெல்லாம் மீண்டும் ஒரு தீபாவளியாக அமையும் என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

அரூர், சுப்ரமணிய சிவா கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்கு ஓமலூரிலிருந்து செல்ல வேண்டுமென்று சொன்னால், 60 கிலோ மீட்டர் தூரம் வடக்கே செல்ல வேண்டும். அதேபோல, விவசாயிகள் தெற்கே உள்ள பொன்னி சர்க்கரை ஆலைக்குச் செல்ல வேண்டுமென்று சொன்னால், 60 முதல் 80 கிலோ மீட்டர் தூரம் வரை செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. சேலம் மாவட்டம், ஓமலூர் பகுதிதான் கரும்பு அதிகமாக உற்பத்தியாகக்கூடிய இடமாயிருக்கிறது. நான் இந்த நேரத்திலே மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களிடத்திலே கேட்டுக்கொள்வதெல்லாம், ஓமலூரில் உள்ள அரூர் சுப்ரமணிய சிவா கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்கு பொன்னி சர்க்கரை ஆலையிலிருந்து ஒரு பகுதியை ஒதுக்கி, ஓமலூர் மத்திய பகுதியிலே குறைந்த திறன்மிக்க ஒரு கரும்பு ஆலையை மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்படி நடைபெறும் அரசுதான் அமைத்துக்கொடுக்க முடியும். இந்தப் பகுதியில் ஆலை அமைக்க வேண்டுமானால், அது மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான் நிறைவேற்றப்படுமென்று எங்களுடைய தொகுதி மக்கள் குறிப்பிட்டுச் சொல்கின்றார்கள். எனவே, இந்த ஆலை அமைப்பது குறித்த கோரிக்கையை மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் மறு ஆய்வு செய்து, குறைந்த திறன் படைத்த ஒரு சர்க்கரை ஆலையை. . .

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2015 ஏப்ரல் 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கிருஷ்ணன், இன்னும் நிறைய கேள்விகள் இருக்கின்றன, உரையை முடியுங்கள்.

திரு. சி. கிருஷ்ணன்: எனவே, சர்க்கரை ஆலையை ஏற்படுத்துவதற்கு அனுமதி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கிருஷ்ணன் அவர்கள் ** குறித்துப் பேசிய வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரூர் சர்க்கரை ஆலைக்குச் செல்வதற்கு 65 கிலோ மீட்டர் தூரமும், பொன்னி சர்க்கரை ஆலைக்குச் செல்வதற்கு 80 கிலோ மீட்டர் தூரமும் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். ஆக, மத்தியில் ஒரு கூட்டுறவுச் சர்க்கரை ஆலை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். நான் ஏற்கெனவே சொன்னதுபோல, இரண்டு ஆலைகளுக்கும் தேவையான கரும்பே இல்லாத காரணத்தினால், 50 சதவிகிதத்திற்கும் குறைந்த அளவே இந்த இரண்டு ஆலைகளிலும் கரும்பு அரைவை செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றது. புதிதாக இன்னொரு ஆலை அமைக்க வேண்டுமென்று சொன்னால், கிட்டத்தட்ட 15,000 ஏக்கர் கரும்பு பயிரிட வேண்டும். ஏற்கெனவே, ஓமலூர் பகுதியிலே 1,500 ஏக்கர் அளவிற்குத்தான் கரும்பைப் பயிரிட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அதனால்தான் சாத்தியக்கூறுகள் இல்லையென்று சொன்னேன். அங்கே கரும்பு அதிகமாகப் பயிரிடுகின்றபொழுது, மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கிருஷ்ணன் அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. சி. கிருஷ்ணன்: *மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து அமைகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 112, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. காமராஜ், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

112—

பேருந்து பணிமனை

***34792—திரு. செ. காமராஜ்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் பேருந்துப் பணிமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஊராட்சி ஒன்றியம், தரங்கம்பட்டி பகுதியில் 3 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு வழங்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கோரப்பட்டுள்ளது. நிலம் தேர்வு செய்யப்பட்டவுடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. காமராஜ், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 113, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.